2010 நவம்பர் 12] [திரு. துரைமுருகன்]

இந்தச் சட்டமுன்வடிவை உங்களுடைய பெருத்த ஆதரவோடு நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரையாற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வயதைப்பற்றிச் சொல்லும்போது, 57 என்று சொல்லிவிட்டேன். எங்களுக்கு எப்பொழுதுமே அவர் இளமையாகத்தான் தெரிகிறார். அதனால் அப்படிச் சொன்னேன். அதை 87 என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 87 என்றுதான் நீங்கள் சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: 87 என்றுதான் சொன்னேனா? அப்படியென்றால், மாண்புமிகு திரு. வீராசாமி அவர்களுக்குச் சரியாகக் கேட்கவில்லைபோல் இருக்கிறது. (சிரிப்பு)

(ஒ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2010), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

பிற்பகல் 2-05

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசாங்கத்திற்கும் தங்கள் மூலமாக சில நியாயங்களைக் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். இப்பொழுது அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சென்னை, மதுரை, கோவை, திருநெல்வேலி, திருச்சி என்று ஐந்து இடங்களில் இருக்கின்றது.

இதிலே ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நடைமுறை விதிகள் வெவ்வேறுவிதமாக இருக்கின்றன. சில நேரங்களிலே பாடத் திட்டங்கள்கூட வேறுவிதமாக இருக்கின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தை ஏன் ஐந்தாகப் பிரித்தோம் என்று சொன்னால், பொறியியல் கல்லூரிகளுடைய எண்ணிக்கை மிக வெகுவாக தமிழகத்திலே வளர்ந்தபடியால் ஒரே பல்கலைக்கழகம் அந்த நிருவாகச் சுமையை ஏற்க முடியாது என்கிற காரணத்திற்காக அதை பூகோள ரீதியாக ஐந்து பகுதிகளாகப் பிரித்தோம். ஆனால், இன்று ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒவ்வொரு விதமான விதிகளை வைத்துக் கொண்டிருக்கிறது. இணைய ஏற்புக்கு தனி விதி; புதிய பாடத் திட்டங்களை ஒரு கல்லூரியிலே அமல்படுத்த வேண்டுமென்றால் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒவ்வொரு வகையான விதிகளை வைத்திருக்கிறது. அதைப்போல மற்ற பல்கலைக்கழகங்கள்கூட, இப்பொழுது திருநெல்வேலியிலே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இருக்கிறது;

@ 11—11—2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 நவம்பர் 12] [திரு. பீட்டர் அல்போன்ஸ்]

மதுரையிலே காமராஜர் பல்கலைக்கழகம் இருக்கிறது. இதைப்போல இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு ஒரு பல்கலைக்கழகத்தை வைத்திருக்கிறோம். இந்தப் பல்கலைக்கழகங்களிலே பாடத் திட்டங்கள் வேறாக இருப்பதைப் பற்றி கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், அங்கேகூட அடிப்படை விதிகள் ஒன்றுபோல இருக்கவேண்டும். இதற்காகத்தான் Common Universities Act, பொதுப் பல்கலைக்கழகச் சட்டம் வேண்டுமென்று கடந்த நான்கரை ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தச் சட்டம் தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வெகுவிரைவிலே இந்தப் பல்கலைக்கழகங்கள் எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாக ஒரே பொதுப் பல்கலைக்கழகச் சட்டமாக இருந்தால்தான் தமிழகம் முழுவதும் ஒரே நிலையிருக்கும். இப்போது சமச்சீர் கல்வி என்று கேட்கிறோம். சமச்சீர் கல்வி என்பது உயர்நிலைப் பள்ளிகளுக்கு. அதைப்போல உயர் கல்வியிலும் சமச்சீர் கல்வி வேண்டுமென்றால் தமிழகத்தில் இருக்கின்ற எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரியான பாடத் திட்டங்கள், ஒரே மாதிரியான கட்டணங்கள், ஒரே மாதிரியான வழிமுறை வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், இப்போது நேரமில்லை. (குறுக்கிடு) சரி, சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக்கழகச் சட்டத் திருத்தங்களைப்பற்றிப் பேசுகின்றபோது ஒரு கருத்தை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அண்ணா பல்கலைக்கழகம் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தோடு சேர்த்தீர்கள். விழுப்புரத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில்தான் பண்ருட்டி உள்ளது. அதை திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தோடு சேர்த்திருக்கிறீர்கள். திருத்தச் சட்டம் வாயிலாக பேச வாய்ப்பு கிடைத்ததால் பேசுகிறேன். உங்களுக்கு வேண்டுகோள் வைக்கிறேன், தயவு செய்து அதை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தோடு சேர்த்தால் எங்களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும். இது ஒன்று.

[திரு. தி. வேல்முருகன்] [2010 நவம்பர் 12

இரண்டாவது, இந்த 5 பல்கலைக்கழகங்களிலே 500-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டு இன்றைக்கு பணியாற்றுகிறார்கள். இதில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றவில்லை. முதலில் திருச்சி அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் மூலமாக casual labour-ஆக யாருக்கு வேண்டப்பட்டவர்களையோ எடுத்தார்கள். அவர்களை இன்று permanent என்று சொல்கிறார்கள். அப்பொழுது இட ஒதுக்கீடு எங்கே போனது? இது என்ன ஜனநாயக முறை? மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், புதிதாக நீங்கள் அறிவித்த பொறியியல் கல்லூரிகளுடைய அனைத்து பேராசிரியர்கள் பணியிடத்திலும் குறிப்பிட்ட சில உயர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் ஆயிரக்கணக்கான பேராசிரியர்கள் பணியிடம் கிடைப்பது என்பது மிக அரிதான ஒன்று. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசில் அதை நீங்கள் செய்திருக்கிறீர்கள், பாராட்டுகிறோம், நன்றி சொல்கிறோம். 62 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் என்னுடைய தொகுதிக்கு பொறியியல் கல்லூரி இல்லை. கேட்டேன், கொடுத்தீர்கள். ஆனால், அங்கு பணி செய்கின்ற 60-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் இல்லை. அவர்கள் யார் என்றே தெரியவில்லை. எப்படி இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்தாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. தி. வேல்முருகன் அவர்களும் சில கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு அதை உணர்ந்துதான் ஆரம்பத்திலே அனைத்துப் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களையும் அழைத்துப் பேசி எல்லோருக்கும் Core Subjects என்று சொல்லப்படுகிற பல்கலைக்கழகங்களுக்கு இடையிலேயான அடிப்படைக் கல்வி ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். ஆனால், பல்கலைக்கழகங்கள் சுயமாக சில பாடத் திட்டங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டதனுடைய நோக்கம். புதிய

2010 நவம்பர் 12] [டாக்டர் க. பொன்முடி]

பட்டங்களையோ, புதிய பாடத் திட்டங்களையோ உருவாக்குகிற உரிமை பல்கலைக்கழகங்களுக்கு கொடுக்கப்படவேண்டும். முக்கியமான பாடங்களை, அடிப்படையான பாடங்களை ஒரே மாதிரியாக வைத்துக் கொண்டு—இப்போது கோவையிலே இருக்கிறோம் என்று சொன்னால் அங்கே நூற்பாலைகள் அதிகம். அதற்குத் தகுந்த மாதிரி சில பாடங்களைத் துவங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது—இடத்திற்கேற்ப சில பாடத் திட்டங்களைக் கொண்டு வருவதற்கும் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டு, அதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு பல்கலைக்கழகங்களுக்கிடையிலே, பாடத் திட்டத்திலே ஒருமைப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம். இது ஒன்று.

அடுத்து திரு. வேல்முருகன் ஒன்றைச் சொன்னார், மண்ணின் மைந்தர்கள் என்பது வேறு, இட ஒதுக்கீடு என்பது வேறு. இந்த இட ஒதுக்கீடு என்பது பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில் கொடுக்கவேண்டிய ஒன்று என்பதிலே எந்த விதமான வேறுபட்ட கருத்தும் இல்லை. பல்கலைக்கழகங்களுக்கான சட்டத்திலேயே அதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்தாத பல்கலைக்கழகப் பிரதிநிதிகளை நிச்சயமாக அழைத்துப் பேசி அங்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு நிச்சயம் செய்யும். அண்ணா பல்கலைக்கழகம் மட்டுமல்ல எல்லா பல்கலைக்கழகங்களிலுமே நீண்ட காலமாக அந்தக் குறை இருந்தது. திருநெல்வேலி பல்கலைக்கழகத்திலே நீண்ட காலமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் இல்லாமலிருந்த நிலையை மாற்றி, இந்த ஆட்சி வந்த பிறகு ஒரு பேராசிரியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்தக் குறைகளையும் களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீடு நியமன முறைகளில் பின்பற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

Common University Act பல்கலைக்கழகங்களுக்கான பொதுவான ஒரு சட்டம் கொண்டுவர ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு, சட்ட வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களையெல்லாம் கலந்து பேசி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் அடுத்தக் கூட்டத் தொடரிலாவது அதை அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 12]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கான சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஓ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2010), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2010) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 10-11-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.